செ.வெ.எண்: 221 நாள்: 19.04.2021

**25.04.2021 அன்று மகாவீர் ஜெயந்தி மற்றும் 01.05.2021 அன்று மே தினம் ஆகிய நாட்களில் டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து மதுபான கூடங்களிலும் மதுவிற்பனை செய்ய கூடாது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

25.04.2021 அன்று மகாவீர் ஜெயந்தி மற்றும் 01.05.2021 அன்று மே தினம் ஆகிய நாட்களில் டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து மதுபான கூடங்களிலும் மதுவிற்பனை செய்ய கூடாது. இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு மதுபான சில்லரை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 25.04.2021 அன்று மகாவீர் ஜெயந்தி மற்றும் 01.05.2021 அன்று மே தினம் ஆகியவை முன்னிட்டு டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து இந்திய தயாரிப்பு அந்நிய மதுபான சில்லரை விற்பனைக் கடைகள், மதுபானக்கடை மற்றும் மதுபானக் கூடங்களில், அனைத்து FL1/FL2/FL3/FL3A/FL3AA மற்றும் FL11 உரிம கடைகள், பார்கள் ஆகியவற்றுக்கு விடுமுறை அளித்து மது விற்பனை செய்யகூடாது.

எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து இந்திய தயாரிப்பு அந்நிய மதுபான சில்லரை விற்பனைக் கடைகள், மதுபானக்கடை மற்றும் மதுபானக் கூடங்களில் அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள் மதுபானக்கூடங்கள் (பார்) மற்றும்

FL1/FL2/ FL3A/FL3AA/FL11 மற்றும்  FL3 ஹோட்டல் பார்கள் ஆகியவற்றுக்கு மேற்கண்ட இரு நாள் விடுமுறை என்பதால் மது விற்பனை ஏதும் நடைபெறாது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**